விலை சதம் 50 ★ பக்கங்கள் — 10

உற்சாகத்தை அளிக்கவல்லது
அண்ணா கோப்பி
மின்சார ரோஸ்டரில்
உங்கள் முன்னிலையில் வறுத்து அரைத்த
அண்ணா கோப்பியை
வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.
விஜயம் செய்யுங்கள்
அண்ணா கோப்பிக்கடை
இல. 4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

ஈழநாடு
வார மலர்
THE EELANADU VARAMALAR

'கந்தர் சஷ்டி கவசம்'
10 மில்க்வைற் நீல சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம்சோப் அல்லது 2 சலவைப் பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

மலர் 21 புரட்டாதி 28 ஜுலைசு 21 ஞாயிற்றுக்கிழமை (14—10—79) இதழ் 244

# யாழ்ப்பாண பல்கலைக்கழக அபிவிருத்திக்கு அதிக நிதி

## கூட்டணி எம்.பிக்களிடம் டாக்டர் கல்பகே உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்படும் என்றும் தேவையான கட்டிடங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படும் என்றும் பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே நேற்று யாழ்ப்பாணத்தில் கூறினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தம்மைச் சந்தித்த வடபகுதி தமிழர் கூட்டணி எம்.பி.க்களிடமே டாக்டர் கல்பகே மேற்கண்டவாறு உறுதி அளித்தார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற யாழ். பல்கலைக்கழக கவுன்சில் கூட்டத்தில் எதிர்க் கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன், கோப்பாய் எம்.பி. திரு. இ. கதிரவேலுப்பிள்ளை, பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம் ஆகியோர்] [கலந்துகொண்டு பல ஆலோசனைகளை வழங்கினர்.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பல்கலைக்கழக அபிவிருத்தி குறித்த ஆலோசனைகளை வழங்கினர்.

மருத்துவ பீடத்தின் அபிவிருத்தி குறித்து முக்கியமாக இக் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

அடுத்தாண்டிலிருந்து விவசாய போதனாபீடம் இங்கு ஆரம்பிக்கப்படுவதால் கட்டிட வசதிகள் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும் என்று பேராசிரியர்கள் வலியுறுத்திக் கூறினர்.

கொழும்பு பல்கலைக் கழக மாணவர்களின் தேவைக்காக யாழ் பல்கலைக்கழகத்திலிருந்து தற்காலிகமாக எடுத்துச் செல்லப்பட்ட நூல்கள் யாழ் பல்கலைக்கழகத்திடம் திருப்பி ஒப்படைக்கவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது. (இ)

## உடுப்பிட்டி எம்.பி, திடீர் சுகவீனம்

(நெல்லியடி)

உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. இராசலிங்கம் திடீர் சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு [எடுத்துச் செல்லப்பட்ட திரு. க. இராசலிங்கம், அம்புலன்ஸ் வண்டிமூலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் இவர், தாம் கலந்துகொள்ள வேண்டிய சகல நிகழ்ச்சிகளையும் ரத்துச்செய்துள்ளார்.

## தமிழக சட்டசபை கலைக்கப்படமாட்டாது

### விஷமப் பிரசாரம் என்கிறார் எம்.ஜி.ஆர்

சென்னை, அக். 13

தமிழக சட்டசபை கலைக்கப்படும் என வெளிவந்த செய்திக்கு தமிழக முதலமைச்சர் திரு. எம். இராமச்சந்திரன் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

சட்டசபை கலைக்கப்படும் என்ற செய்தி விஷமத்தனமாக வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரமாகும் என்றும் அவர் கூறினார்.

### 15000 பேர் விடுதலை

மதுவிலக்கு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சாவலில் வைக்கப்பட்டுள்ள 1,500 பேரும் விடுதலை செய்யப்படுவர் என்றும், தொடர்ந்து நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 51 ஆயிரம் வழக்குகளும் ரத்துச் செய்யப்படும் என்றும் அவர் கூறினார். (இ)

கிளிநொச்சியில்

## யாழ். மாவட்ட அமைச்சருக்கு அமோக வரவேற்பு

(கிளிநொச்சி)

யாழ். மாவட்ட மந்திரி திரு உ. க்குபண்டார விஜயக்கோனுக்கு கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமையன்று அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அன்று காலை 8-20 மணிக்கு ஸரப்போக்கு உபதபால் நிலையத்தின் தொலைபேசிச் சேவையை அவர் ஆரம்பித்து வைத்துவைத்தார். இவருடன் திரு கனகசூரியர் யாழ்ப்பாண அரச அதிபர் திரு. யோகேந்திர துரைசுவாமி ஆகியோரும் பிரசன்னமாயிருந்தனர். விழாவின் ஆரம்பத்தில் கிளிநொச்சி தபால் நிலைய அதிபர் திரு. ராஜரட்ணம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அமைச்சர் தமது உரையில் "தொலைபேசிச்சேவை இன்றைய உலகிற்கு அத்தியாவசிமானதாகும். இவ் உலகில் உள்ள மக்களுக்கிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தும் இச் சேவையை நான் ஆரம்பித்து வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். 1972-ம் ஆண்டு திறக்கப்பட்ட இவ் உபதபால் நிலையம் 1974-ம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டபோதும் இப்போதுதான் தொலைபேசிச் சேவை ஆரம்பிக்கப்படுகிறது எனவும் குறிப்பிட்டார்.

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ் ஒஸ்மானியாக் கல்லூரியின் அபிவிருத்திச் சபையின் பொதுக்கூட்டம் இன்று காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (செ)

'வீடியோ' தொலைக்காட்சி
ஒறிஜினல் என்றால் 'நியூ விக்ரேஸ்'
'நியூ விக்ரேஸ்' என்றால் ஒறிஜினல்
நியூ விக்ரேஸ் 'வீடியோ' தொலைக்காட்சியை
பார்த்தவர்களிடம் கேளுங்கள்
கேட்டவர்களிடம் அறியுங்கள்
கலரில் களங்கமில்லாமல் பார்வையில் நடுக்கமில்லாமல் ஒலியில் தரம் குறையாமல் ஒளியில் மாறுபாடு இல்லாமல் கண்ணுக்கு குளிர்மையாகவும் காதுக்கு இனிமையாகவும் இருப்பதுதான் 'நியூவிக்ரேஸ்' ஸ்தாபனத்தாரின்
ஒறிஜினல் 'வீடியோ' சினிமாப்படத் தொலைக்காட்சிகள்
இவற்றை உங்களுக்கு அறிமுகப்படுத்தும் ஒரேயொரு ஸ்தாபனம் இலங்கையில் 'நியூ விக்ரேஸ்' மட்டும்தான் என்பதைப் பெருமையுடன் தெரியப்படுத்துகிறோம்
ஒறிஜினல் "வீடியோ" கலர் சினிமாப்படங்கள்:-
அண்ணன் ஒரு கோயில், ஜெனரல் சக்கரவர்த்தி, நாம் பிறந்த மண், பருவமழை கைவசமுண்டு
நியூ விக்ரேஸ்
23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7804.

லாலா சோப்
ஸ்தாபனத்தாரின்
நாடகவிழா......
17-10-79 புதன்கிழமை மாலை அச்சுவேலி மகாவித்தியாலய அரங்கில் நடைபெறும்
டணால் தங்கவேலு - எம். சரோஜா
குழுவினரின் விசேட நிகழ்ச்சிகள்
இடம்பெறும். அனைவரும் வருக!
விழாக்குழுவினர்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இறைச்சிக்கும் குஞ்சுக்கும் வளர்ப்புக்கும் ஏற்ற இசெக்ஸ் இன சேவல்களும் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: மாலினி கோழிப்பண்ணை, 87, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். 3833

3 சிலிண்டர் லிஸ்ரர் என்ஜின் பூட்டிய இரண்டு புதிய இயந்திர வள்ளங்கள், நைலோன் வலைகள், றோளர் வலைகள் விற்பனவுக்குண்டு. சென். பீற்றஸ் ஐஸ்பக்ரறி, முல்லைத்தீவு. 3795

பருத்தித்துறை புலோலி தெற்கு மந்திகையில் (8¾) எட்டேகால் பரப்புத் தோட்டக்காணியும் தெரு முகப்புடனும் மாலிசந்தியில் (4½) நாலேகால் பரப்புக் காணிக்குள் அமைந்திருக்கும் பெரிய தோர் நாற்சதுர வீடும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: இன்னாசி கந்தசாமி, சரஸ்வதி வாசம், புலோலி தெற்கு, புலோலி. 3829

தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு அருகாமையில், இட்டலி ஒழுங்கையில் 5 பரப்பு காணி, வீடு மற்றும் வான் பயிர்களுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- திருமதி. இ. சின்னையா, கிழானை, தெல்லிப்பழை கிழக்கு. 3788

உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் எழுதுனர்கள், காசாளர்கள், கல்வேசர்கள் பதவி ஐம்பது வேற்றிடங்கள். ஒரு ரூபா அல்லது நான்கு முத்திரை அனுப்பி விண்ணப்பம் பெறவும். இயக்குனர், யாழ் ஸ்போர்ட்ஸ், மானிப்பாய். 3813

## தேவை

புதிதாகத் திறக்க இருக்கும் ஸ்தாபனத்துக்கு பெண் முகாமையாளர், பெண் உதவியாளர் தேவை. நற்சாட்சிப் பத்திரத்துடன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன் விண்ணப்பிக்கவும். M. R. M. சண்பாய். 79/1, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம். 3839

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான ஸ்தாபனமொன்றிற்கு கவுண்டர்கிளார்க் தேவை. மின்சார உபகரணங்கள் பற்றிய அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. முடிவு திகதி 19-10-79 விண்ணப்பிக்கவும். விளம்பர இல 3807, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3807

## தேவை

யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான ஸ்தாபனமொன்றிற்கு ஆங்கிலத்தில் கணக்குகள் பதிவேடுகளில் எழுதுவதற்குக் கணக்குப் பதிவாளர் (Book-keeper) தேவை. முன் அனுபவம்/கணக்குப் பதிவில் சிறப்புப்பயிற்சியுடைந்தோர் விரும்பத்தக்கது. முடிவு திகதி: 20-10-79. விண்ணப்பிக்கவும். விளம்பர இல 3835, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3835

யாழ் நகரிலுள்ள அலுமினிய தொழிற்சாலைக்கு கீழ்க்காணும்பணியாட்கள் தேவை. அச்சிணைவர்கள், பொலிஷர்கள், எமறி அடிப்பவர்கள் அனுபவமுடையோர் கீழ்க்காணும் விலாசத்திற்குச் சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். உரிமையாளர், மொகிடீன் இன்டஸ்றீஸ், 70, கோவில் லேன், A. P. லேன், சோனகதெரு, யாழ்ப்பாணம். 3777

அரசாங்க சேவையில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்றவரும், கணக்கியலிலும் கணக்குப் பரிசோதனையிலும் நீடியகால நேரடி அனுபவமும் உள்ள ஒருவருக்கு யாழ்ப்பாணத்தில் வேலை தேவை — இராசரத்தினம், 'திருபதி' தொல்புரம் மேற்கு, சுழிபுரம். 3840




15-10-79 திங்கட்கிழமை காலை 9-00 மணி முதல் மாலை 6 மணிவரை யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில், பிரெஞ்சுத் தூதுவராலயம் அளிக்கும்

பிரெஞ்சு இன்னிசைக் (கண்) காட்சி
"LA CHANSON EN FRANCE"
"பிரான்சின் பாடல்கள்" இடம்பெறும்.
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.
130, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 7782. 3800

# தசாம்ச...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)
பார்த்திராத நன்மைகள் கிடைக்கும், சிரிய நோக்கம் உயர்வைத் தேடித்தரும், மூகமன் பேசுபவர்களுடன் கவனமாக இருக்கவும்.

**எண்: 6**

இவர்களுக்கு இந்த வாரம் போகம் நிறைந்த வாழ்க்கை அமையும் எனினும் வஞ்சகக் குணம், சுயநலமும் கூடுதலாக இருக்கும். இன்பத்தின் அமைப்பு, தாராளமாகக் கிடைக்கும். அந்தஸ்துக்கு மீறியவர்களின் ஆதரவு கிடைக்கும், எனினும் அதன்பலனைச் சிலர் தவறவிட்டுவிடவும் கூடும். காதலர்கள் வாழ்க்கையில் குதூகலம் கூடுதலாக இருக்கும். இலர் பேராசையால் உந்தப்பட்டு உத்தியோகத்தை ராஜினாமாச் செய்யவும்கூடும். உணவு முறைகேடால் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

**எண்- 7**

இவர்களுக்கு இந்த வாரம் புதுவிதமான கற்பனைகள் எழுத்தில் தோன்றும், எழுத்தாளர்களுக்கு நல்லபேரும் புகழும் ஏற்பட இடமுண்டு ஆனால் அதிர்ஷ்டம் இராது. முன்னேற்றத்தில் முயற்சிகளில் ஆர்வம் கூடுதலாக இருக்கும், எதிலும் துணிந்து இறங்குவார்கள், நோய் ஏற்பட்டாலும் வெளிக்காட்டாமல் சாமர்த்தியமாக மறைத்துக் கொள்வார்கள், பாதுகாப்பு உத்தியோகங்களில் உள்ளவர்களுக்கு கௌரவம், புகழ், கீர்த்தி பெறக்கூடியதாக இருக்கும், நீண்டநாள் தடை நீங்கக் கூடும்.

**எண்: 8**

இவர்களுக்கு இந்த வாரம் பலவித கஷ்டங்களும் சோதனைகளும் ஏற்படலாம், வாழ்க்கை நிலை ஒரு சர்க்கஸ் ஆட்டம் போன்றதாக இருக்கும், தலையிடியான காரியங்களில் சிக்கநேரிடும், இவர்களை நேற்றுப்போற்றியவர்கள் இன்று தூற்றவும்கூடும். குடும்ப விவகாரங்களால் நீதிமன்றம் செல்லவும் நேரிடலாம். தொழில் முயற்சிகளில் ஒருவித சோர்வு பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**எண்: 9**

இவர்களுக்கு இந்த வாரம் குடும்ப வாழ்க்கையில் சிக்கல்

# ஓர் ஏழையின் இதயம் ...

(8ம் பக்கத் தொடர்ச்சி)
இரத்தம் தேவைப்பட்டது. அந்த நேரம் இரத்த வங்கியில் அவருக்குத்தேவையான இரத்தம் இல்லை. இதனால் அவரின் நிலை மிகவும் மோசமாகியது ஒரு கிலேபர் இரத்தம் கொடுக்க முன்வந்தும் அந்த இரத்தம் பொருந்தவில்லை. இச்செய்தி முரளியின் காதிலும் எட்டியது உயிர் நண்பனின், வளர்த்தவனின் தந்தை என்ற முறையில் அவரைப்பார்க்க அவன் விரைந்தான்.

முரளி அவசர அவசரமாக டாக்டரிடம் சென்று என்னுடைய இரத்தத்தைச் சோதித்துப் பார்க்குமாறு கூறினான். டாக்டர் அவனைப் பார்த்து முறுவலித்துவிட்டு சிறிதளவு இரத்தம் எடுத்து பரிசோதனை செய்தார் முரளியின் கையைப் பிடித்து குலுக்கிவிட்டு மிஸ்ரர் உங்களுடைய இரத்தம் பொருந்துகின்றது.

முரளியிடம் இருந்து ஒரு பைந் இரத்தம் எடுத்து நாராயணசாமிக்கு ஏற்றப்பட்டது. இரத்தம் ஏற்றி மூன்று மணித்தியாலங்களின் பின் சுயநினைவு திரும்பியது!

கண்விழித்தவர் டாக்டரை பார்த்து என் உயிரைக் காப்பாற்றிய உங்களுக்கு மிகவும் நன்றி' என்று கூறினார்.

'மிஸ்ரர் நாராயணன் நான் உங்கள் உயிரைக் காப்பாற்றவில்லை உங்களுக்கு இரத்தம் தந்தவருக்குத்தான் நீங்கள் நன்றி கூறவேண்டும்!

'அப்படியா டாக்டர் நான் அந்த தெய்வத்தைப் பார்க்க வேண்டும்' என்று கூறினார்.

டாக்டரும் முரளியையழைத்துக்கொண்டு வந்தார்! முரளியைக் கண்டதும் நாராயணசாமிக்கு தூக்கிவாரிப்போட்டது! இருவரினதும் கண்கள் ஒன்றை ஒன்று சந்தித்தன! அதில் எத்தனை எத்தனை அர்த்தங்கள் பொதிந்திருந்தன-அந்த பார்வை! என்னை மன்னிப்பாயா? என்ற இறைஞ்சுவதுபோல் இருந்தது!

கள் ஏற்படலாம் சமூக விரோதமான காரியங்களில் சுயநலத்தால் தூண்டப்பட்டு ஈடுபடநேரிடலாம், பணத்துக்கும், பதவிக்கும் இக்கட்டு ஏற்படலாம், குணக் கோளாறால் புகழ் குன்றநேரிடலாம், கோபக்குணம் கூடுதலாக இருக்கும், மறைமுகச்சக்திகளைப்பற்றி அவதானமாக இருக்கவும் சிலருக்குச் சில சமயங்களில் கொலை செய்யக்கூடிய விரோதிகளும் தோன்றக்கூடும், எதிர்பாராத விபத்துக்கள் ஏற்படலாம்.

'வரகி'

சி. அ. செல்வத்துரை
களாவடி,
ஆனைக்கோட்டை.

# அரங்கும்.........

(4ம் பக்கத் தொடர்ச்சி)
பெரிதும் கடுகிறது. மாணவர்களுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட பிற்பகல் காட்சிக்கு மண்டபத்தில் அடக்க முடியாத அளவுக்கு மாணவர்கள் திரண்டனர். மகாஜனக் கல்லூரி மாணவர்களையும் வேறுசில பாடசாலை மாணவர்களையும் இரவுக்காட்சியை பெரியவர்களுடன் சேர்ந்து பார்க்கும்படி பணிக்க நேரிட்டது. நாலாயிரத்துக்குமேற்பட்ட ரசிகர்கள் அன்றைய இரவுக் காட்சியை சுவைத்தனர். வடமாநிலக் கல்விப்பணிப்பாளர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் நிகழ்ச்சிகளின் தரத்தைவியந்து பேசினர் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பரிசில்கள் அளித்தார். தனது வட்டாரத்தில் கலை உணர்வை மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் ஊக்கி உற்றுபணி புரியும் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சிவஞானசுந்தரத்தை அனைவரும் போற்றுகின்றனர்.

## Pedro Coolers Ltd.

Vacancies:

Applications are invited for the following posts at our Factories at Point Pedro-

MECHANICS AND PLANT OPERATORS

Preference will be given to those
I. Below 30 years of age.
II. Possessing job knowledge in operating Ice Plants and Cold Storage Units

Salary:- Negoti ble depending on qualifications and experience

Application should be sent to the undermentioned to reach before 31st Oct 1979.

MANAGER,
Pedro Coolers Ltd,
Gnanam's Building,
23, Clock Tower Road,
Jaffna.

3838

## பதவி வெற்றிடம்

i. கணக்கு லிகிதர் [ஆண்]
ii. போட்டோஸ்ராற் மெஷின் இயக்குனர் [ஆண்]
iii. விற்பனை உதவியாளர் [பெண்]

கல்வி, வேலை அனுபவம் முதலிய சான்றிதழ்களுடன், இரு சிபார்சு செய்பவர்களின் பெயர், விலாசங்களை இணைத்து 22-10-1979-க்கு முன் விண்ணப்பிக்கவும்.

நிருவாக முகாமையாளர் (யாழ்ப்பாணக் கிளை)

# த பினன்ஸ் கம்பனி லிமிட்.,

191, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சென். பற்றிக்ஸ் கல்லூரி பழைய மாணவர் சங்க ஆதரவில் (S. P. C. கட்டிட நிதிக்காக)
தென் இந்திய திரைப்பட நகைச்சுவை ஜோடிகளான
கே. ஏ. தங்கவேலு—எம். சரோஜா
குழுவினர் அளிக்கும்

## "சப்தஸ்வரங்கம்"

இடம்: சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்
காலம்: 15-10-79 மாலை 7 மணி
டிக்கட்டுகள்: ரூ 50, ரூ 25, ரூ 15, ரூ 10, ரூ 5
டிக்கட்டுகள் முன்கூட்டியே பெறும் இடங்கள்:
1. பிலிப்ஸ் தேவகிஹோம்—பிரதானவீதி, யாழ்ப்பாணம்
2. J. E. திருச்செல்வம் — திருச்செல்வம் அன் கோ ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
3. நிச்கோப்பியார் — நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
4. S. P. C. O. B. A. — 59, சென். பற்றிக்ஸ்வீதி, யாழ்ப்பாணம்.
5. டியூலிப்ஸ் — பிரதானவீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி தொடர்புகள் 7251, 561

3792

# அவனுக்கும் இதயம் இருக்கிறது

சாரதா படலைக்கு வருவதும் அங்கு நின்று வீதியை எட்டிப் பார்ப்பதும், உள்ளுக்குப் போவதுமாக நிற்கிறாள். மாலை ஐந்து மணிக்கு ரியூசனுக்குப் போன கணவன் மாதவனை இன்னமும் காணோம். "அம்மா, மணி ஒன்பதுக்கு மேலாகிவிட்டது அப்பாவை ஏன் இன்னமும் காணோம்" எனக் கேட்டுக்கொண்டு கடலந்து நின்றாள் மூத்தமகள் அனுஷா.

நேரம் போகப் போக அவளுடைய ஏக்கமும் அதிகரித்தது. 'கல்லூரியில் மாணவர்களிடையே அவருக்கு நல்ல எதிர்ப்பு இருக்கிறது. இன்றும் ஏதோ பிரச்னை என்று கூறினவர் இந்தக் காலப்பொடியன்களை யார்தான் நம்புவார்கள்? வழியிலேதான் அவருக்கு ஏதேன் நடந்ததோ?' இப்படி கற்பனை செய்கிறபோது அவளுக்கு இலேசாக தலை வலிப்பது போலிருந்தது.

மாணவர் என்னதவறு செய்தாலும் அதை அவரால் மன்னிக்கமுடியாது. மிருகங்களை அடிப்பதுபோல ஈவிரக்கமில்லாமல் அடிப்பார். நான்கு பாடசாலைகளுக்கு மாற்றம் எடுத்தாச்சு. எங்கும் பிரச்னைதான் உங்களுக்குப் படிப்பிக்கிறவேலை சரிவராது. விட்டு விடுங்களேன் என்றாலும் விடுகிறார் இல்லை.

பென்சன் எடுப்பதற்கு இன்னமும் பத்து வருடங்கள் இருக்கின்றன அவ்வளவு காலமும் ஏங்கிக்கொண்டு இருக்கேலாது. இன்று இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கத்தான் வேண்டும்-' அவளுடையமனம் இவ்வாறு பேசிக்கொண்டது.

ஒன்பதரை மணியளவில் மாதவன் சயிக்கிளில் வந்து இறங்கினான். அவனைக் கண்ட மகிழ்ச்சி நீடிக்க முன்னர் வாய்விட்டுக் கத்தவேண்டும் போலிருந்தது அவளுக்கு.

மாதவனின் சேட்டு கிழிந்திருந்தது. முகத்தில் இரத்தக் கிறல்களும் இருந்தன, "என்ன இது? சயிக்கிளால் விழுந்தீர்களா'' என்று பதறியபடி கேட்டாள் சாரதா. அவன் சிறிது நேரம் எதுவும் பேசாமல் நிலத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். "இல்லை அம்மா ஆட்களை வைத்து அடிப்பித்துப்போட்டார்கள்."

அவள் பொங்கிவழியும் கண்ணீருடன் "உதுக்குத்தானே சொன்னனான் படிப்பிக்கிறவேலை உங்களுக்குச் சரிவராது பேசாமல் விட்டுவிட்டுத் தோட்டத்தை செய்யுங்கோ என்று! எங்களுக்கென்ன ஐந்தாறு பிள்ளைகளா? ஒன்றே ஒன்றுதானே!"

"வா, உள்ளுக்குப்போய் கதைப்போம்' என்று கூறி அவளை வீட்டுக்குள் கூட்டிச் சென்றான்.

மாதவன் கட்டிலில் தலைக்குக் கீழ் இரண்டு கைகளையும் வைத்துக்கொண்டு நிமிர்ந்து படுத்திருந்தான். தலைமாட்டில் சாரதா இருந்தாள். அவள் அவனைப் படிப்பிக்கிற வேலையை விட்டுவிடும்படி அழாக்குறையாக மன்றாடிக் கொண்டிருந்தாள்.

அவனும் எதுவும் பேசாமல் அவள் சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தான்.

மாதவன் ஒரு கிழமையாக கல்லூரிக்குப் போகவில்லை. நிலைமை இந்த அளவுக்கு வந்த பின்னர் அங்கு படிப்பிப்பது தனக்குக் கௌரவக் குறைவு என நினைத்தான். எனவே படிப்பிக்கிற வேலைக்கு முழுக்குப்போடுவதென தீர்மானித்தான்.

மாதவன் ஓய்வு பெறப் போகிறசெய்தியை அறிந்ததும் மாணவர் கூட்டம் இரண்டாகப் பிரிந்தது. கணிதம் படிப்பிப்பதில் அவனுக்கு நிகர் அவன்தான். அவனைப் பிடித்துத் தின்னுகிற அளவு ஆத்திரம் கொண்டோரும் அவன் பிரியப் போகிறான் என எண்ணி வேதனைப்பட்டார்கள்.


விஷயம் அறிந்த பெற்றோர்கள் அவனுடைய வீட்டுக்குப் படையெடுத்தார்கள். "சேர், நீங்கள் அங்கு இல்லாவிட்டால் எங்களுடைய பிள்ளைகள் படிப்பதில் பிரயோசனமில்லை" என்று பலர்கூறினார்கள்; ஆனால் அவனுடைய முடிவு மாற்ற முடியாதது என்பதை பேச்சு வார்த்தையின் இறுதியில் கண்டார்கள்.

"சேர், அப்படியென்றால் எங்களுடைய பிள்ளைகளை உங்களுடைய வீட்டுக்கு அனுப்புகிறோம்; பாடம் சொல்லிக் கொடுங்கள்' என்றார்கள். அவனும் 'ஆம்' என்பதுபோல தலையசைத்தான்.

மாதவனுக்கு பிரியாவிடை வழங்க கல்லூரி முடிவுசெய்திருந்தது அவனுக்கு அதில் கலந்துகொள்வது விருப்பம் இல்லாது இருந்தும் ஒரு முக்கிய காரணத்திற்காக நான் இதை அவசியம் எனக் கருதினான்.

அன்று அந்தக் கல்லூரியின் மூன்றுவது மாடி மாணவர்களால் நிரம்பி வழிந்தது, ஆசிரியர்களும் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக நின்றிருந்தார்கள். மாதவன் மேடையில் அமர்ந்திருந்தான். அவன் பேச எழுந்ததும் அவனைப் பேசவிடாமல் கேலி செய்வதற்கும் ஒரு கூட்டம் காத்திருந்தது.

முதலில் கல்லூரி அதிபர் பேசினார்: "மாதவன் ஒரு திறமைமிக்க ஆசிரியர் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். திறமையென்றால் சாதாரண திறமையல்ல. அவர் கணிதம் படிக்கும் வேளைகளில் பல தடவைகள் நான் மறைந்திருந்து கேட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட திறமைமிக்க ஆசிரியர் தன்னுடைய முன்கோபத்தால் மாணவர்களின் வெறுப்புக்கு ஆளாகி இன்று எங்களை விட்டு பிரிந்து போகிறார் அவருடைய பிரிவால் உண்மையில் நான் வேதனைப்படுகிறேன்' என்றார்.



அதிபரைத் தொடர்ந்து வேறு சில ஆசிரியர்களும், மாணவர்களும் பேசினார்கள். மாதவன் பேசுவதற்கு எழுந்ததும் மாணவர்கள் கைதட்ட ஆரம்பித்தார்கள். அது அவனை அவமதிப்பது போலிருந்தது. அவன் எதிர்பார்த்தது தான்... அவன் பேச்சை ஆரம்பித்ததும் அங்கு அமைதி நிலவியது. அவன் என்ன பேசப்போகிறான் என அறியும் ஆவல் அவர்களுக்கு இருந்திருக்கவேண்டும்.

"நீங்கள் பலருக்குப் பிரியாவிடை கொடுத்திருப்பீர்கள். அப்போதெல்லாம் இன்றைய சூழ்நிலையிலேதான் இருந்திருப்பீர்கள் என்றால் இல்லை. இன்று ஆத்திரக்காரனுக்கு, இதயமில்லாதவனுக்கு, இரக்கமில்லாதவனுக்கு பிரியாவிடை கொடுக்கப்போகிறீர்கள்.

நான் ஏன் அப்படி நடந்துகொண்டேன்? காரணம், என் மனதில் ஆழப்புதையுண்டிருக்கும் ஒரு சோக காவியந்தான், அதைவெளிக்கொண்டு வருவதற்குச் சந்தர்ப்பம் அளித்த உங்களுக்கு என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**கந். தர்மலிங்கம்**

எனக்கு ஒரு அண்ணன் இருந்தான். சின்ன வயதிலே அப்பா எங்களைவிட்டு நிரந்தரமாகப் போய்விட்டார் அம்மாவின் கண்டிப்பற்ற சூழ்நிலையில் நாம் வளர்ந்து வந்தோம்.

சிறிய வயதிலிருந்து செல்லமாக வளர்க்கப்பட்ட அண்ணன் பிற்காலத்தில் தீயவழிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். அம்மா அவர் மீது காட்டிய அளவற்ற பாசம் துணை நின்றது.

ஒரு நாள் பொலிசார் இனர் அண்ணனைத் தேடி வீட்டுக்கு வந்தார்கள். சயிக்கிள் ஒன்றைக் களவாடிய குற்றத்துக்காக பிடித்துச்சென்றார்கள். பெற்றவள் பதறினாள். குறுக்கே விழுந்து கும்பிட்டு மறித்தாள். அவர்களா விடுவார்கள்?

அண்ணனை ஜீப் வண்டியில் ஏற்றுகிறபோது அம்மா மயங்கி விழுந்தார். அந்த மயக்கம் இரண்டு நாட்களில் நிரந்தரமாகியது. இரண்டு வருடங்கள் சிறையில் இருந்து விட்டு திரும்பி வந்த அண்ணன் அவமானத்தால் தற்கொலை செய்துகொண்டார்.

அப்பாவை, அம்மாவை, கூடப் பிறந்த அண்ணனை இழந்து அநாதையாக விடப்பட்டேன். அந்த இடத்தில் மாதவனின் நா தழுதழுத்தது. கண்கள் கலங்கின. கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டான்.

அநாதையாக விடப்பட்ட என்னை. மாமா படிப்பித்து ஆளாக்கினார். அந்தச் சம்பவம் என்னுடைய மனதில் ஆழப் பதிந்துவிட்ட காரணத்தால் தான் நீங்கள் சிறிய தவறு செய்தாலும் அதை மன்னிக்க முடியாத நிலைக்கு வந்துவிடுகிறேன்.

என்னுடைய அண்ணனுக்கு ஏற்பட்டது உங்களுக்கும், என்னுடைய தாய்க்கு ஏற்பட்ட நிலைமை வேறு எந்தத் தாய்க்கும் ஏற்படக்கூடாது என்று நான் ஆசைப்பட்டேன். அதனால் முன்கோபியானேன். பிழைசெய்யும் உங்களைத் தண்டித்தேன் அதற்கு நீங்கள் நல்ல பாடம் படிப்பித்துவிட்டீர்கள்.

இந்த நிலைமை நீடிக்கக் கூடாது என்பதற்காகவே உங்களை விட்டுப் பிரியமுடிவு செய்தேன். நடந்த சம்பவங்களிலிருந்து நீங்கள் பாடம் படித்து, மனிதனாக வாழமுற்பட்டால் அதுவே எனக்குப் போதும்.'

அவன் பேச்சை முடித்துக் கொண்டதும் ஒரு சோக காவியத்தை கேட்ட உணர்வுடன் அங்கிருந்தவர்கள் பெருமூச்சு விட்டுக்கொண்டார்கள்.

மாதவனை அவமானப்படுத்தி அனுப்பவேண்டும் எனக் காத்திருந்தவர்களும் கண்கலங்கி நிற்க அவன் அவர்களை விட்டுப் பிரிந்துபோய்க்கொண்டிருந்தான்

(யாவும் கற்பனை)


## 'வீர சங்கிலியன்'

### அந்தனிசில் எழுதுகிறார்



"வீரசங்கிலியன்" என்ற தலைப்பில் யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசித் தமிழ் மன்னனும் சங்கிலி மன்னனைப்பற்றி "தீப்பொறி" ஆசிரியர் திரு அந்தனிசில் எழுதும் தொடர் கட்டுரை 21-0 79 'ஈழநாடு' வாரமலரில் ஆரம்பமாகிறது.

வியாபாரம் என்று வந்து நாடுபிடிக்கத் திட்டம் தீட்டிய வெள்ளைப்பறங்கியர் மீது வேங்கையெனப் பாய்ந்து செருக்களத்திலே தோற்கடித்த சங்கிலி மன்னனுக்கு எதிராக உருவாக்கப்பட்ட சூழ்ச்சிகளும், சதிகளும் இக்கட்டுரையில் அம்பலமாக்கப் படுகின்றன.

சரித்திரம் என்ற போர்வையில் சங்கிலிமன்னனின் பெயருக்கு களங்கம் கற்பித்து எழுதிய சூழ்ச்சிகளையும் இனம் காண்பிக்கிறது இக்கட்டுரை.

தேசபக்தனும், அஞ்சாநெஞ்சனும், மாவீரனுமாகிய சங்கிலி மன்னன்மீது ஏற்படுத்தப்பட்டுள்ள களங்கத்தை இதுவரை யாரும் அலசி ஆராய்ந்து துடைத்தெறிய முயற்சிக்கவில்லை. இக்கட்டுரை அப்புனித பணியைச் செய்கிறது.

சங்கிலி மன்னனைக் கொலைகாரன் என்றும்; பெண்கள்ளன் என்றும், பட்டாபிஷேகமின்றி ஆசிபீடமேறியவன் என்றும் குற்றம் சுமத்தினார்கள் பறங்கியரும் அவர்களின் அடிவருடிகளும்.

அதாவது குற்றவாளிகளே நீதிபதிகளாக மாறினார்கள்.

இவையனைத்தையும் தனக்கே உரித்தான பாணியில் விமர்சிக்கிறார் 'தீப்பொறி' ஆசிரியர்.

கற்றோரும், மற்றோரும், எல்லோரும் அவசியம் படிக்க வேண்டிய கட்டுரை இதுவாகும்.

வாசகர்களே! உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

கூடுதல் பிரதிவேண்டும் ஏஜண்டுகள் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.


# வெள்ளை மாளிகையில் ஒரு தொடர் 'மர்மம்'

அமெரிக்காவின் கடந்த அரசியல் சரித்திரத்திலே ஒரு தனிமனிதனது வாழ்வை அஸ்தமிக்கச் செய்து அதன் மூலம் ஒரு பெரும் வல்லரசின் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த, இருபெரும் கிரகங்களின் சேர்க்கை மூலகாரணமாக இருந்து வந்திருக்கின்றது. சோதிட சாஸ்திரத்திலே வாழ்வின் விதியைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கும் இரு பெரும் கிரகங்களாகிய, வியாழன், சனி என்பன, 'நில' இராசிக்குரிய மூன்று இராசிகளான மகரம், இடபம், கன்னி என்பனவற்றில் ஒன்று சேர்ந்து கிரக சந்திப்பில் இருக்கும்போது, வெள்ளை மாளிகையில் பதவி வகித்த எந்த ஒரு அமெரிக்க ஜனாதிபதியும் உயிருடன் மாளிகையைவிட்டு வெளியேறவில்லை. ஒருவேளை-பூச்சியத்தில் முடிவடையும் ஆண்டுகளில் தெரிவுசெய்யப்பட்டபடியால் பூஜ்சியமானார்களோ?...இதைக் கடந்தகால அமெரிக்க சரித்திரம் நிதர்சனமாக எடுத்துக் காட்டுகிறது.

1840-ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு 'மகர' ராசியில் வியாழனும் சனியும் ஒன்று சேர்ந்த, கிரக சந்திப்பில் இருக்கும்போது பதவிவகித்த 'வில்லியம் எச்ஹரிசன்' உயிருடன் வெள்ளை மாளிகையை விட்டு வெளியேறவில்லை. 1860-ம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு 'கன்னி' இராசியில் வியாழன் சனி சேர்க்கையில் பதவிவகித்த ஆப்ரகாம் லிங்கன் சுட்டுக் கொலைசெய்யப்பட்டு வெளியேற்றப்பட்டார் 1880-ம் ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்று 'இடப' இராசியில் வியாழன் சனி சேர்க்கையில் பதவிவகித்த 'ஜேம்ஸ் எகாபீல்ட்' படுகொலை செய்யப்பட்டு அகற்றப்பட்டார்

**'பிர்ஸா' நாதன்**

1900-ம் ஆண்டு ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டு வியாழன், சனி என்பன 'மகர' இராசியில் மீண்டும் ஒன்று சேர்ந்த போது, பதவிவகித்த 'வில்லியம் மாகின்லி' பதவியில் உயிருடன் விட்டு வைக்கப்படவில்லை. 1920-ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு வெள்ளை மாளிகையில் பதவிவகித்த ஜனாதிபதி 'வரன்ஜிஹாரிடிங்' 'கன்னி' இராசியில் வியாழன், சனி கிரக சந்திப்பில் பதவி வகித்து, உயிரற்றவராகவே வெளியேற்ற பட்டார் ஜனாதிபதி பிராங்கிளின் ரூஸ்வேல்ட், மூன்றுவது தடவையாக ஜனாதிபதியாக 1940-ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டு 'இடப' இராசியில் வியாழன், சனி கிரக சந்திப்பில் பதவிவகித்துப் பிணமாகவே வெள்ளை மாளிகையைவிட்டு அகற்றப்பட்டார். 1960-ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட ஜோன் கெனடி 'மகர' இராசியில் வியாழன் சனி கிரக சந்திப்பில் பதவிவகித்து மிருகத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டார்

1980-ம் ஆண்டு அமெரிக்காவில் எங்கோ ஒரு மூலையிலிருந்து ஒரு குடிமகன் ஜனாதி

(9-ம் பக்கம் பார்க்க)

## வைக்கோல் எரிபொருளாகிறது

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசில் வைக்கோலை எரிபொருளாகப் பயன்படுத்தி இயங்கும் சக்தி பொறியிலிருந்து சுமார் 158000 விவசாய இல்லங்கள் எரிபொருள் பாவனையைப் பெறுவதோடு களஞ்சியங்களில் தானியங்களை பழவகைகளை உயர்த்தவும் கூடியதாகவுள்ளது. இதனால் பல இலட்சம் ரூபாபெறுமதியான எண்ணெயை ஜெர்மன் ஜனநாயகக்குடியரசால் சேமிக்கக்கூடியதாக உள்ளதாகத் தெரிகிறது.

# அரங்கும் அவையும்

## சரித்திரம் சமைத்த 'ஓடிவிளையாடு பாப்பா'

நாடக அரங்க கல்லூரியின் ஐந்தாவது படைப்பாக அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் மேடையிடப்பட்ட 'குழந்தை' சண்முகலிங்கத்தின் "கூடிவிளையாடு பாப்பா" என்ற சிறுவர் நாடகம் ஈழத்தமிழ் நாடக உலகில் ஒரு சரித்திரம் சமைத்திருக்கிறது என எண்ணத் தோன்றுகிறது. முழு நீளச் சிறுவர் நாடகம், அதுவும் நவீன உத்திப்பின்னல்களுடனும் கலைவடிவுடனும் முதற் தடவையாக எம்மிடை உலாவ காரணமாய் விளங்குபவர் இதன் சிருஷ்டி கர்த்தா 'குழந்தை' அவர்களே தான்.

பார்வையாளர்களைப் பொறுத்த வட்டிலும் இந்நாடகம் ஒரு திருப்புமுனையாக அமைகிறது. ஒரே மாணவர்க்காக பிரத்தியேகக் காட்சியும், ரசிகர்களுக்காக இரவுக்காட்சியும் நிகழ்ந்தன. மண்டபம் கொள்ள முடியாத அளவுக்கு ஆயிரத்து இருநூறுக்கு மேல் பள்ளிமாணவர்கள் குவிந்ததும், கண்டுகளித்தும், ஆடு, பூனை, நரி, கரடி, பன்றி, சேவல், நாய், குரங்கு மனிதன் மத்தியில் பூரித்து புளகித்ததும் கண்கொள்ளாக் காட்சிகளே. இரவுக் காட்சிக்கு இரசிகரை உறுப்பினரைத் தவிர நுழைவுச் சீட்டுப்பெற்று வந்த ரசிகர்களும் ஏராளம். சுவைஞர்கள் நாடகத்துடன் ஒன்றி இணையும் வகையில் நாடக அமைப்பு இருந்ததால் பல தடவை அவையினரும் சேர்ந்து பாடி மகிழ்ந்தனர். வடபிரதேசக் கல்விப் பணிப்பாளரே சரவோஷமிட்டு அடக்கமாகச் சேர்ந்து பாடப் பின்நிற்கவில்லை. கல்லூரிகளில் இந்நாடகம் கட்டாயம் காட்டப்பட வேண்டியவை என வாயார வாழ்த்தினர். வகை செய்வேன் எனவும் உறுதி கூறினர். மனிதனும் மிருகங்களும் மரவள்ளி பிடுங்குதல், ஆடும் பன்றியும் வீடுகட்டுதல், சேவலாரின் பிறந்த நாளை எல்லோரும் கொண்டாடுதல், உறங்கும் வேளையில் சேவலை கள்ளமாகப் பிடித்து உண்ண நரியார் முயலுதல், பிடிபடுதல், வரலறுந்து வெட்கமுறுதல் போன்ற நிகழ்வுகளை ஆடியும் பாடியும் உரைமுகமாக பல ஆழ்ந்த கருத்துக்களை சிந்தையும் நகைச்சுவையும் அளவாக இழையோட நன்கு நடித்தனர் பங்குகொண்ட கலைஞர்கள். ஆடாக எஸ். ஜே. குமார், 'மியாவ் மியாவ்' பூனையாக இசநாகேந்திரா, ஊளையிடும் கள்ள நரியாக நவரத்தினம், கரடி, பன்றி, சேவல், நாயாக முறையே தனபாலசிங்கம், பிரான்சிஸ், தெம்பராதன், பேர்மினஸ், கறணமடிக்கும் குரங்காக சுந்தரலிங்கம், மனிதனாக நாசிபிக்கல் பாத்திரம் தாங்கிநிருக்கையை சிறுவர்களைப் பார்த்து, மிருகங்களுக்குரிய வெவ்வேறு குரல்கள் சப்தங்களை வெளியிட்டு நடை அசைவு என் பலத்தையும் பொருத்தமாக இணைத்து சிறுவரும் பெரியோரும் கூடி மகிழும் வகை செய்தார்கள்.

மனிதன் பாத்திரம் இளமை மிடுக்குடன் அமையாது முதுமையின் படியில் ஏறும் தாடிவளர்த்த மனிதனாக இருந்தால் பொருத்தமாய் இருக்குமென்றுர் ஒரு எழுத்தாளர். முதியவர்களிடம் சிறுவர்களுக்கும் சிறுவர்களிடம் முதியோருக்கும் பரிவும் விருப்பும் எழுவது இயல்பு. குழந்தைக்கு மிடுக்கான வாலிபரை விட சற்று தளதளத்த கிழவனின் பிடிப்பு அதிகமிருக்கலாம். மரவள்ளி பிடுங்க முடியாமையும் மற்றையோர் உதவியை வரவேற்பதும் தைரியம் அற்ற கிழவனுக்கே பொருந்தும். மிருகங்களிடமும் கிழமனிதனே கூடிய பரிவு காட்டுவான்; மிருகங்கள் மத்தியில் கிழவனும் சேர குழந்தைகளுக்கு ஒரே குஷிதானே என்று பல காரணங்களையும் அடுக்கிச் சென்றார் எழுத்தாளர். எழுத்தாளர்களைக்கூட சிந்திக்கவைக்கும் அளவுக்கு வெற்றி நடை இருக்கிறது 'கூடிவிளையாடு பாப்பா' இம்மாதம் பிற்பகுதியில் கொழும்பில் இருதடவை மேடையேற இருக்கிறது இச்சிறுவர் நாடகம். குழந்தையின் பிரதி மேடையில் பவனிவர வடிவமமைத்த இயக்குநர் தாசீசியஸை மறக்கமுடியுமா?

## கலைப்பேரரசு ஏ.ரீ.பொன்னுத்துரை

## நடேஸ்வராவில் 'பொறுத்தது போதும்'

கலாச்சாரப் பேரவை அகில இலங்கை ரீதியில் நடாத்தும் நாடகப் போட்டியில் பங்குகொண்ட நாடக அரங்க கல்லூரி தனது தயாரிப்பான "பொறுத்தது போதும்" நாடகத்தை 23-9-79 யாழ் மத்திய கல்லூரியில் நடுவர்கள் முன்னிலையில் நடித்துக் காண்பித்தது. தரமான நாடகம் என்ற கருத்து அங்கு பரவலாக அடிபட்டது. இதனைத் தொடர்ந்து 28-9-79ல் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியிலும் 30-9-79-ல் குரும்பசிட்டி சன்மார்க்க சபையிலும் மேற்படி நாடகம் மேடையிடப்பட்டன. என்றுமே இல்லாத நிசப்தத்தை ரசனையில் ஊறிய நிலையை இன்று மாணவர் மத்தியில் தாம் காண்பதாகவும், உச்சக்கட்டத்தில் சத்மாட்டியை வெறுப்பதை மாணவர்கள் தமது பிரதிபலிப்பால் காட்டியமையும், மேடையிடப்பட்ட கலைவடிவக்கோர்வையும் தம்மை வியக்க வைத்தன என நடேஸ்வராக் கல்லூரி அதிபர் குறிப்பிட்டார். தென்னகத்திலேயே இது பெரு வெற்றியீட்டும் என பல ஆசிரியர்கள் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

## சன்மார்க்க சபையில்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 45-வது ஆண்டு விழாவும் முத்தமிழ் பெருவிழாவும் மூன்று நாட்கள் தொடர்ந்து நிகழ்ந்தன. இரண்டாம்நாள் நிகழ்ந்த "பொறுத்தது போதும்" நாடகத்தை தரமான சுவைஞர்கள் கண்டு மகிழ்ந்தனர். மேடையே அமைக்காது நிலத்திலேயே நடிக்கும் வகையில் நாம் ஒழுங்கு செய்திருந்த போதும், உருவம் உள்ளடக்கம், பலவேறு கலைவடிவம், இனிமையான கிராமிய மீனவர் பாடல் ஆடல் சலிப்பில்லா ஓட்டமுள்ள கதை அவையோரே விருகொளும் முடிவு அத்தனையும் நாடக அரங்க கல்லூரிக்கு மகத்தான வெற்றியை ஈட்டிக்கொடுத்துள்ளது என சபைப் பொதுச்செயலாளர் திரு சு. இராசரத்தினம் நன்றி நவிலலின் போது குறிப்பிட்டார்.

## கட்டுமீறிய கலையார்வம்

காங்கேசன்துறை கல்வி வட்டாரப் பிரிவில் உள்ள பாடசாலைகளின் இசை நடன, நாடகங்கள் பதினொன்று அகில இலங்கை ரீதியாக கல்விப்பகுதியினால் நடத்தப்பட்ட போட்டியில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றன. இவை அனைத்தையும் அரங்குக்கு கொண்டுவரும் வகையில் அண்மையில் மகாஜனக் கல்லூரியில் இடம் பெற்ற கலைவிழா அவ்வட்டாரத்தில் பீறிட்டுப் பிரவாகிக்கும் கலையார்வத்தை

[9ம் பக்கம் பார்க்க]


இவ்வாண்டு தித்திக்கும் தீபாவளி பண்டிகைக்கான
சிறந்த ஜவுளித் தெரிவுகளுக்கு அழைக்கிறது...
யாழ்நகரில் புதிய நிறுவனம்....



மயூரா சென்டர்



மயூரா சின்டிக்கேற் உற்பத்திப் பொருட்களும்;
"ஹிங்" காமென்ஸ் றெடிமேட் தயாரிப்புக்களும்,

இதோ

★ சாறிவகைகள்
- வூலி சாறிஸ்
- G44 சாறிஸ்
- சற்றின் கிறேப் சாறிஸ்
- றெறின் சாறிஸ்
- பிரின்டெட் காஞ்சிபுரம்
- (F)புல்வொயில் சாறிஸ்
- J.B. நைலெக்ஸ்

★ றெடிமேட் ஆடைகள்
- ஜில் பெல்ஸ் (GILL)
- டெனிம் ஜீன்ஸ் (DENIM)
- மயூரா பெல்ஸ் (MAYURA)
- லேடிஸ் பெல்ஸ்
- ராங்கிலர் சேட்
- பிளீட்டட் ஸ்கேட்ஸ்
- சேட்வகைகள்

★ சிறுவர் ஆடைகள்
- ஜில் பெல்ஸ்
- பிளீட்டெட் புறெக்ஸ்
- மக்ஸி புறெக்ஸ்
- T. சேட்ஸ்
- மியூசிக் சூட்ஸ்
- சோட்ஸ்
- சேட்வகைகள்

அனைத்திற்கும் யாழ்நகரில் புதிய நிறுவனம்

மயூரா சென்டர்

13[B] நவீன சந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7556.

### சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின்

### பணிகளை முழுமையாக அறிவதற்கு

# ஈழத்து சைவ வரலாறு தெளிவாக எழுதப்படவேண்டும்

(சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் 1979-09-29 அன்று நடைபெற்ற சைவப் பெரியார் நினைவு விழாவில் நிகழ்த்திய உரையின் சுருக்கம்)

தனிமனிதன் தன்னைச் சூழவுள்ள சமுதாயத்தின் பண்பாட்டு வளர்ச்சிக்குத் தனது அறிவையும் ஆற்றலையும் அர்ப்பணித்து, வரலாற்றை முன்னெடுத்துச் செல்வானாகில் அத்தகு பிரதிநிதியாகச் சமுதாயம் அவனை வரலாற்று மனிதனாகக் கணிப்பளிக்கின்றது. ஈழத்தின் சைவப்பண்பாட்டின் வரலாற்றிலே இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலே திகழ்ந்த வரலாற்று மனிதர்களிற் குறிப்பிடத்தக்க முதன்மையாய்ந்தவர் 'சைவப் பெரியார்' என்ற சிறப்புப் பெயரிட்டழைக்கப்படுபவரான புலோலி சு. சிவபாதசுந்தரம் அவர்களாவர். 19-ம் நூற்றாண்டில் சைவப் பண்பாட்டுக் காவலராகத் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தொடக்கிவைத்த சமயப் பணியை எமது காலம்வரை தொடர்பாக வளர்த்துவந்த நாவலர் ஞானபரம்பரையினரில் முதல்வரிசையில் வைத்து எண்ணப்படும் சிறப்புவாய்ந்தவர் சைவப்பெரியார்.

புலமைசான்ற சைவமரபிலே தோன்றி, பட்டதாரியாக மலர்ந்து, ஆசிரியப் பணியிலே புகுந்து, சமயத் தத்துவ விரிவுரையாளராகவும் நூலாசிரியராகவும் வளர்ந்து, சைவம் வளர்க்கும் தனிமனித நிறுவனமாகத் திகழ்ந்து சைவ வரலாற்றிலே தன் பெயரை நிறுவிச்சென்ற சைவப்பெரியார் அவர்களின் சாதனைகளை அவர் வாழ்ந்த (1878-1953)

இயங்கிக்கொண்டிருந்த வேளையில் ஈழத்தில் தனிமனித நிறுவனமாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சைவத்தைக் காத்து நிறுவியிருந்தார்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சைவசிந்தனையாளர்கள் பெருமளவு பிறமதக் கருத்துக்களைத் தருக்கரீதியாக மறுப்பதிலும் சைவசித்தாந்த அடிப்படை நூல்களை நுணுகி ஆராய்ந்து நிறுவுவதிலும் கவனம் செலுத்தினர். நாவலர் ஞானபரம்பரை முதல்வர்களான காசிவாசி செந்திநாதையரும் நா. கதிரைவேற்பிள்ளையும் இத்துறைகளில் பெரும் ஈடுபாடுகொண்டனர். செந்திநாதையர் வடமொழிமூல நூல்களையும் தமிழ்நூல்களையும் தொடர்புபடுத்தி அரிய பல ஆய்வுகளை நிகழ்த்தினார்.

தேவாரம் வேதசாரம், சைவவேதாந்தம், நீலகண்டபாஷ்ய தமிழ்மொழிபெயர்ப்பு சிவஞானபோத வசனாலங்



யாளன் ஒருவனுக்குரிய சமூகக் கடமைகள் என்ற வகையில் தனிப்பட்ட வாழ்க்கையிலும் சமூக நிறுவனங்களுடன் இணைந்தும் வாழ்ந்து காட்ட வேண்டிய தேவையும் இருந்தது இவற்றை நிறைவுசெய்

அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இவ்வகையில் நாவலர் பெருமான் உருவாக்கிய சமயக்கல்வி வரலாற்றை அடுத்த தலைமுறையினர்க்கு எடுத்துவந்த சமயக்கல்வியாளர் என்ற பெருமைக்கு சைவப்பெரியார் உரியவராகின்றார். சமயத்துறையில் மட்டுமன்றிக் கல்விஉளவியல் துறையிலும் இவர் பெற்றிருந்த 'நுண்மாண் நுழைபுலம்' இப்பணிக்குப் பேருதவிபுரிந்தது. இவர் பணிபுரிந்த பரமேஸ்வராக் கல்லூரி இன்று பல்கலைக்கழகத்தரத்துக்கு வளர்ந்துள்ளதென்ற உண்மைஆரம்பகாலத்தில் இவர்இட்ட கல்வி அடித்தளத்தின் உறுதியை நிதர்சனமாக்குகின்றது. தென்னிலாம் இன்றும் இவர் நினைவைத் தாங்கித் திகழ்கிறது சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரி.

## நாகராஜ ஐயர் சுப்பிரமணியம் எம். ஏ.

(துணை விரிவுரையாளர்- யாழ். பல்கலைக்கழகம்)

காரதீபம் முதலியன இவரால் எழுதப்பட்டன. பல கண்டன நூல்களையும் எழுதினார். மாயாவாதத்தை எதிர்த்துப் பிரசங்க மழை பொழிந்த 'மாயாவாத தும்சகோளரி' என்றும் 'அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்' என்றும் சிறப்புப் பெயர்களைப்பெற்ற நா. கதிரைவேற்பிள்ளை 'சைவசித்தாந்த சுருக்கம்', 'சுப்பிரமணிய பராக்கிரமம்' புத்தமத கண்டனம் முதலிய பல நூல்களை எழுதினார். இதே காலப்பகுதியில் தமிழ் நாட்டவரான சூளை. எஸ். சோமசுந்தரநாயக்கர் வைணவ சமயத்தைக் கண்டிக்கும் வகையில் பாஞ்சராத்திர

வதற்கு தமிழ் - சமஸ்கிருதம் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் புலமைவாய்ந்தவர்களும் தத்துவ நெறியை விளக்குவதற்கேற்ற தருக்க நூலறிவும், உளநூலறிவும் சமய ஒழுக்க நெறிகளில் தீவிர ஈடுபாடும் அதேசமயம் பொது வாழ்வில் தலைமைவகிக்கும் ஆற்றலும்பெற்ற அறிஞர் பெருமக்களை சைவசமூகம் எதிர்நோக்கி நின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலருக்குப் பின் மேற்கூறிய பண்புகள் பலவும் நிறையப்பெற்ற வராகக் கிடைத்தவர் சு. சிவபாதசுந்தரம் அவர்கள்.

## நாவலர் பரம்பரையின் முதல் வரிசையில் இடம் பெறும் சிறப்பு வாய்ந்தவர்

முக்கால் நூற்றாண்டுக்காலச் சைவ வரலாற்றும் பகைப் புலத்திற் பொருத்திநோக்கி மதிப்பிடவேண்டியது வரலாற்றுத் தேவையாகவே அமைகின்றது.

### நாவலர் ஞானபரம்பரை

சிவபாதசுந்தரனார்கள் வாழ்ந்த காலம் ஈழத்தினதும் இந்தியாவினதும் வரலாற்றிலே ஒரு நிலைமாறுகாலம். அரசியலில், அடிமைத்தனத்திலிருந்து விடுதலையை நோக்கி வரலாறு நெறிப்பட்டுக்கொண்டிருந்தது. சமூகவாழ்க்கையில், அறியாமையினின்றும் மூடப்பழக்க வழக்கங்களிலிருந்தும் பண்பாட்டு விழுமியங்கள் தொடர்பான அறிவை நாடி வரலாறு நெறிப்பட்டது. மரபுவழிவந்த இந்து தத்துவ நெறிகளும் அவற்றினடிப்படையிலான பண்பாட்டம்சங்களும் மேலைத்தேய சமய, தத்துவ அறிவியல், சமூகவியல் சிந்தனைகளின் தாக்கத்திற்கு ஈடுகொடுத்துத் தம்மை நிலைநிறுத்திக்கொள்ள முயன்றன. பழைமை பேணுதல், புதுமைதழுவுதல், சமரசம் காணல் முதலானநோக்கங்களுடன் இந்தியாவில் சமய இயக்கங்கள் நிறுவனரீதியில்

மதசபேடிகை, சித்தாந்த சேகரம், சைவசூளாமணி முதலிய பல நூல்களை எழுதினார்.

### இருபதாம் நூற்றாண்டு

இவ்வாறு பிறமத கண்டனத்தையும் தத்துவ மூலங்களை நுணுகி ஆய்வதையும் நோக்காகக் கொண்டிருந்த சைவசித்தாந்த சிந்தனைமரபில் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குறிப்பிடத்தக்க திருப்பம் ஏற்படுவதை அவதானிக்க முடிகிறது. 'திறமான புலமையெனில் பிறநாட்டோர் அதை வணக்கம் செய்தல் வேண்டும்' என்று பாரதி முழங்கிய அன்றைய சூழ்நிலையின் தேவைக்கேற்ப சைவசித்தாந்தத்தின் விழுமியங்களை உலகமொழியாகிய ஆங்கிலத்தில் எடுத்து விளக்கும் நோக்கம் உருவாகியது. மேலும் ஆராய்ந்து நிறுவப்பட்ட கருத்துக்களையும் மூல நூல்களின் உட்பொருளையும் சாதாரண பொதுமக்களும் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் இலகுவான உரைநடையில் வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்படலாயிற்று. அத்துடன் சமய சிந்தனை

### தேவைக்கேற்ற தலைவர்

காலத்தின் தேவையை நிறைவுசெய்யும் வகையில் கிடைத்த இவ் வறிஞரைச் சைவஉலகம் நன்கு பயன்படுத்திக்கொண்டது. இப்பயன்பாட்டின் பிரதியாகவே சைவப்பெரியார் என்ற சிறப்பை நல்கிக்கௌரவித்தது. சைவப் பெரியாரின் சமயசாதனைகளை சமூகப்பணிகள், சமய நூலாசிரியத்தகைமை என்ற இருவகைகளில் நோக்கலாம்.

சமூகப்பணி என்ற வகையில் அவரது நீண்டகால ஆசிரிய சேவையும் கல்லூரி அதிபராக நிர்வாகம் நடத்திய பண்பும் ஈழத்திற்கே சிறப்பான சமயக்கல்வி மரபுக்கு முன்னுதாரணமாக அமைந்தன. ஒழுக்கநெறிகளிலும் சைவத்தத்துவ ஈடுபாட்டிலும் மிக்க சிறப்பான மாணவ பரம்பரை ஒன்றை உருவாக்கினார். இன்று ஈழத்தின் பலபாகத்திலும் மட்டுமன்றி மலேசியாவிலும் சைவம் பேணும் அறிஞர் பெருமக்களிற் பலர் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனாரின் மாணவராக அன்றேல் அவரின் மாணவ சந்ததியினராக

### பன்முகப்பட்ட பணி[illegible]

சைவப்பெரியாரின் பன்முகப்பட்ட சமூகப்பணியின் பெறுபேறுகளை அவர் இணைந்து பணியாற்றிய ஆசிரிய சங்கங்கள் கல்விக்கழகங்கள், கல்விவிசாரணைச் சபைகள், சனசமூக நிலையங்கள், மடங்கள், மதுவிலக்கு மகாசபைகள், சைவமாநாடுகள், சீர்திருத்தச் சபைகள், திருப்பணிச் சபைகள் முதலியனவற்றின் வரலாறுகளுடன் தொடர்புபடுத்தி ஆராயின் விரிவுபெறும். இவையாவற்றிலும் அவர் பணிபுரிந்தபோது அறத்துக்கும் தமது சமய நம்பிக்கைக்கும் சிறிதேனும் வழுவேற்படாத வகையில் நடந்துகொண்டார் என அறியமுடிகிறது. குறிப்பாக திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபைத் தலைவராகப் பணியாற்றிய இவர் அவ்வாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட நவக்கிரகப் பிரதிஷ்டை தமது சிவ நம்பிக்கைக்கு ஊறுசெய்வதென உணர்ந்தபோது அத்தலைமையைத் துறக்கத் தயங்காதவர்.

சைவப் பெரியாரின் சமூகப் பணிகளில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்று அவரது பேச்சுவன்மை. சிந்தனையாளரான பெரியார் கேட்டாரைப் பிணிக்கும்தகைய சொற்பெருக்காளராகத் திகழ்ந்தார். அவர் சார்ந்திருந்த ஆசிரியப் பணியும் அவர் பெற்றிருந்த உளநூலறிவும் சிந்தனையாற்றலும் சமகாலத்தில் ஈழத்தில் சிறந்த உரைவல்லாளராக அவரை ஆக்கியிருந்தன.

### அதிமனிதன்

இவ்வாறு சமூகத்தின் பல்வேறு துறைகளுடனும்சார்ந்து இயங்கிய பெரியார் தனது தனிப்பட்ட வாழ்விலே கொண்டிருந்த சைவத் திருக்கோலத்தை

"ஒல்லியானதேகம்-குடுமி-மடித்துக்கட்டிய எட்டுமுழ வேட்டி-சால்சட்டை, சப்பாத்து, செருப்பு அவர் கால்கள் அறியாதவை-

(6-ம் பக்கம் பார்க்க)

## 'உலக நாயகன்' ஜயப்பிரகாசர்!


மாந்தருக்குள் ஒருதெய்வம் காந்தி யண்ணல்
வகுத்தவழி நின்றுலகம் வாழ நாளும்
சாந்தமுடன் பணிபுரியும் சான்றோன் இந்து
தருமத்தின் உருவமாம் விநோபாஜீயின்
சாந்திவழி கண்டவரைச் சார்ந்தே எங்கும்
'சர்வோ தயம்' புரிந்த ஜயப்ரகாச
ஏந்தலார் இயற்கையெய்தி விட்டார் அம்மா!
இந்தியரும் பெருமுதுசொம் இழந்தார்
அம்மா

இளமையிலே புரட்சிக்கோர் வீரர் என்றே
எல்லோரும் போற்ற நின்ற இயல்பு
வாய்ந்தோன்
வளமிகுந்த வாலிபத்தில் காந்தியண்ணல்
வழிநின்றே நேருமன்னன் மதிக்க
வாழ்ந்தோன்
தளபதியாய்ச் சுதந்திரப்போ ராட்டந் தன்னில்
தனிச்சிறையில் தவம்புரிந்த மானவீரன்
களம் பலவும் கண்டுகளி கொண்ட அண்ணல்!
'காங்கிரசார்' கருவத்தை அடக்கி
வென்றோன்!

'உலகநா யகன்' என்றே பரத நாடு
உவந்தேத்தப் பணிபுரிந்த உரவோன்!
பின்னர்
கலகமே புரிந்துநின்று ஆட்சியாளர்
கட்சிகட்டிப் பிரிந்தழிதல் கண்டு கண்டு
''நிலவுமுயர் 'நந்தவனம்' அமைத்தேன் அம்மா!
நேசமின்றிச் சிதைத்துவிட்டார்'' என்றே
கட்சி
அலகில் பெருங்கவலையுடன் தூங்காநின்றே
அமரராய் விட்டனரோ ஜயப்ர காசர்!

- வித்துவான் சி. ஆறுமுகம்

## 2-வது ஜனத்திரள் வாரம்



# ஸ்ரீதர் (யாழ்நகர்)

காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கவேண்டியிருப் பதால் காட்சிநேரங்கள்குறிப் பிடமுடியாமைக்கு மன்னிக்வும்.

நடிகர் திலகம்

★ சிவாஜி கணேசன்

நடிப்புச்செல்வி

★ சுஜாதா

அறிமுகம் விஜயகுமார், சங்கீதா, நாகேஷ், சத்தியப்பிரியா, ராமதாஸ், மனோரமா, சுந்தரராஜன், சுருளிராஜன், சச்சு இன்னும் பலர் நடித்திருக்கிறார்கள்.

இசை : இளையராஜா

வெள்ளிவிழாச் சித்திரம்

# தீபம்

[வர்ணக் கலர்]

---

## நாகம்ஸ் (சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30, சனி, ஞாயிறு 2-30

விஜயலலிதா

**ரிவோல்வர் ரீட்டா**

---

## RIO Jaffna

Phone: 7607

Daily 10-30 a.m 4-45, 7-00 & 9-30 p m

**One Chance In A Thousand**

(Spy-Thriller)

---

## வெண்ணிலா.........

(3-ம் பக்கத் தொடர்ச்சி) பதிவாகத் தெரிவு செய்யப் படப் போகின்றார்.

1981-ம் ஆண்டு திரும்பவும் வியாழன் சனி கிரகசந்திப்பு நிகழவிருக்கிறது.

கடந்த காலத்தில் சம்பவித் தொடர்ச்சியாக நடைபெற்று வந்த சம்பவங்களை நினைத் துப்பார்க்கும் போது......... இதயம் சற்று வேகமாகத் தான் அடிக்கிறது!

---

## வெலிங்டன்? (காவிப்பாய்)

தினசரி 6-30, 9-30 சனி, ஞாயிறு 2-30

ஜெமினி - சரோஜாதேவி

**ஆடிப்பெருக்கு**

---

Till 18 th only

## SHANTHI JAFFNA PHONE 7642

Daily 0-30, 2-30, 4-45 7-00, & 9-30 p m

JOE DON BAKER in

**"WALKING TALL"** Action Packed Color Movie

ரசிகர்கட்கு தித்திக்கும் தீபாவளி திரைவிருந்து!

19 முதல் ஜெய்... ஸ்ரீதேவி... **டாக்சிடிரைவர்** (கலர்)

---

## REGAL Jaffna

Daily at 2-00 4-30, 7-00 & 9-30p m only

**FOR PETE'S SAKE**

---

## ராஜா

யாழ் நகர்

எம். ஜி. ஆர். - பத்மினி

நடித்த

**அரசிளங்குமரி**

(புதிய பிரதி)

---

## வின்ஸர்

யாழ்ப்பாணம்

தினசரி 10 30, பி.ப 2-30 6-30, 9-30

ஜெய்சங்கர்-விஜயலக்ஷ்மி

நடித்த

**வல்லவன் ஒருவன்**

(புதிய பிரதி)

---

## Now howing — Ranee [Jaffna]

Daily at 10-30 a m, 2-30, 4-30, 7-00 & 9-30 p m

After its record breaking run in Colombo now comes to entertain you.

The most eagerly awaited Film.
The Best War Film to be released after a lapse of several years.




# OPERATION DAY BREAK

(One of the True great adventure story of our time)

---

## வெலிங்டன்

தினசரி 3 காட்சிகள்

சனி-ஞாயிறு காட்சிகள்

ஸ்ரீகாந்த்-ஜெயலலிதா

**வெண்ணிற ஆடை**

---

## லிடோ

யாழ். நகர்

போன்: 7693 தினசரி 4 காட்சிகள் 18-10-79வரை

சிவாஜி- சரோஜாதேவி

நடித்த

**ஆலயமணி**

---

## 2-வது ஜனத்திரள் வாரம்

# மனோஹரா யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

★ சிவாஜி கணேசன் ★ சுஜாதா

சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன்

மனோரமா, சுகுமாரி

மற்றும் முன்னணி நடிகர்களும் நடித்திருக்கிறார்கள்.

முக்தா பிலிம்சாரின்



# அந்தமான் காதலி

இசை: எம். எஸ் விஸ்வநாதன்

(வண்ணப்படம்)

மதுவும் — எம். பிக்களும்

# முன்னைய ஆட்சியில் பாராளுமன்றம் இரவு 8மணிக்கு பின் தவறணைபோல்'இருக்குமாம்

## ஜனாதிபதி ஜே. ஆர். வெளியிடும் தகவல்

(கலவத்தை)

ஸ்ரீமவோ சுதந்திரக்கட்சி யின் கடந்த ஆட்சிக்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் மது அருந்திவிட்டு பாராளு மன்றத்திற்கு வந்தனர்

கடந்த ஆட்சிக்காலத்தில் இரவு 8 மணிக்குமேல் பாரா மன்றம் ஒரு தவறணை போன்றே காட்சி அளிக்கும்-

சபாநாயகர்கூட அப்போது இரவு 8 மணிக்கு மேல் கூட் டத்தை நடத்த தயக்கம் காட்டுவார்-

கடந்த ஆட்சிக் காலத்தில் ஒருநாள் பாராளுமன்றத்தில் பேசிக்கொண்டிருந்தேன். அப் போது பிரதமராக இருந்த திருமதி பண்டாரநாயக்கா வுக்குப்பின் ஆட்சிக் காலத்தில் இருந்த அரசாங்கக்கட்சி எம். பி ஒருவர் மதுமோதையில் தமது இருக்கையை விட்டு எழுந்து தள்ளாடி எதிர்க்கட் சிப் பக்கமாக குறுக்கே நடந்து வந்து எனது கன்னத்தடவி னார்-

இன்று அப்படியில்லை-

கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் எவராவது மது போதையில் பாராளுமன்றத் திற்கு வந்தார்கள் என இது வரை எவரும் முறைப்பாடு செய்யவில்லை-

இது பெருமைக்குரியது-

அண்மையில் இரவு முழுவ தும் பாராளுமன்றக் கூட்டம் நடைபெற்றபோதிலும் எவ ரும் அரசாங்கக் கட்சி உறுப் பினரோ அன்றி எதிர்க்கட்சி உறுப்பினரோ மதுபோதை யில் வரவில்லை-

அரசாங்க கட்சி உறுப்பினர் களிடம் பாராளுமன்றத்திற்கு வரும்போது மதுபோதையில் வரவேண்டாம் என்று கூறி யுள்ளேன்-

அவர்கள் வீட்டில் மது அருந் துவதையோ மதுபோதையில் இருப்பதையோ என்னால் எப் படித்தடுக்க முடியும்-

புத்தபிரான் செய்ய முடியா ததை என்னால் எப்படிச்செய்ய முடியும்?

அகலவத்தை தொகுதியில் நேற்று முன்தினம் நடை பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனா பாராளு மன்ற உறுப்பினர்கள் மது அருந்துவதுபற்றி குறிப்பிடு கையில் மேற்கண்டவாறு கூறி னார். (இ)

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் வல்லிபுரம்

நெல்லியடி மஹாத்மா தியேட்டர் உரிமையாளர் வல்லிபுரம் காலமானார். அன்னார் பொன்னம்மாவின் அன்புக் கணவரும், வடிவேலு, திருமதி திருநாமம் மாணிக்கம் (மலேசியா), காலஞ்சென்ற திருமதி தங்கம்மா செல்லையா ஆகியோரின் சகோதரரும், திருமதி தெய்வானை வடிவேலு, காலஞ்சென்ற திரு நாமம், காலஞ்சென்ற செல்லையா ஆகியோரின் மைத் துனரும், பாலேந்திரன் (லண்டன்), கிரோசதி (லண் டன்) தேவசேனா, யோகராணி, சாந்தி, கண்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் தனராஜ குலசிங்கம், புஷ்பா (லண்டன்), சத்தியா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், ராஜு, பபி ஆகியோரின் பேரனும் ஆவார். ஈமக்கிரியைகள் 14-10 79 ஞாயிறு பிற்பகல் 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ் வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

3841

## கவாஸ்கர் விஸ்வநாத் சாதனைகள்

(புதுடில்லி)

டெஸ்ட் கிரிக்கட் வரலாற் றில் ஆகக் கூடுதலாக 21 செஞ்சரிகளைப் பெற்ற சாதனை ஒன்றை இந்திய காப்டன் சுனில் கவாஸ்கர் ஏற்படுத்தி யுள்ளார்.

இந்திய கோஷ்டியின் சிறந்த துடுப்படி வீரரான குண்டப்பா விஸ்வநாத்தும் ஒரு வருடத்தில் ஆயிரம் ஓட்டங்களைப்பெற்ற இரண்டாவது இந்திய வீர ருக்கான பெருமையைப்பெற் றுள்ளார்.

நேற்று ஆரம்பமான இந்திய- அவுஸ்திரேலிய 4-வது கிரிக்கட் டெஸ்ட்டின் முதல்நாள் ஆட் டத்தின்போது இச்சாதனைகள் ஏற்படுத்தப்பட்டன.

நேற்றைய ஆட்டநேர முடி வில் இந்தியா 3 விக்கட் நஷ் டத்திற்கு 267 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

கவாஸ்கர் இறுதி ஓவரில் 115 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார். இவரது மைத்து னர் விஸ்வநாத் 83 ஓட்டங் களுடன் ஆடிக்கொண்டிருக்கி றார். இன்று ஆட்டம் தொட ரும். (இ)

## யாழ். லயன்ஸ் பிரம்புகளை விநியோகிக்கும்

(யாழ்ப்பாணம்)

வெள்ளை பிரம்புதினத்தை முன்னிட்டு யாழ் லயன்ஸ் கழகத்தினர் கண்பார்வையற் றவர்களுக்கு வெள்ளைப்பிரம்பு விநியோகிக்கவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை காலை யாழ். பெரியாஸ்பத் திரியில் கண் கிளினிக் கை நிலையத்தில் வைத்து விநியோ கம் செய்யவுள்ளதாகவும் வெள்ளைப் பிரம்புகளைக் கையில் கொண்டு செல்லும் கண் பார்வையற்றவர்களை பொது மக்கள் இலகுவில் இனங்கண்டு கொள்ளத்தக்க வகையிலேயே இவை விநியோகம் செய்யப்படு வதாகவும் யாழ். லயன்ஸ் கழகத்தலைவர் டாக்டர் எஸ். சபாரத்தினம் தெரிவித்தார். (கு)

## பதவி வெற்றிடங்கள்

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள வர்த்தக ஸ்தாபனமொன்றுக்கு

- முகாமையாளர்
- பெண் காசாளர்
- தட்டெழுத்தாளர்கள்
- எழுதுவினைஞர்கள்
- விற்பனையாளர்கள்,
- வான்சாரதிகள்

ஆகிய பதவிவெற்றிடங்கள் உண்டு. விண்ணப் பிக்க விரும்புவோர் தமது கல்வித் தகைமை அனுபவம்,நற்சான்றிதழ் பற்றிய விபரங்களு டன் 23-10-79க்குமுன்விண்ணப்பிக்குக.

விளம்பர இல: 3825. மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 3825


## மகத்தான தீபாவளிப் பண்டிகைக்கு

மறக்கமுடியாத ஜவுளி வகைகள்!



உங்கள் மனதை விட்டகலாத அபிமானத்துக்குரிய

"ராஜ்கோபால்ஸ்" ஸ்தாபனத்தாரின்



மயூரா சின்டிக்கேற் உற்பத்திப் பொருட்களும்

"ஹிங்" காமென்ஸ் றெடிமேட் தயாரிப்புகளும்

இதோ

| ★சாறி வகைகள் | ★றெடிமேட் ஆடைகள் | ★சிறுவர்உடைகள் |
| --- | --- | --- |
| வூலி சாறிஸ் | ஜில் பெல்ஸ் (GILL) | ஜில்பெல்ஸ் |
| G 44 சாறிஸ் | டெனிம் ஜீன்ஸ் (DENIM) | பிரிேற்றெட் புறெக்ஸ் |
| சற்றின் கிறேப் சாறிஸ் | மயூரா பெல்ஸ் (MAYURA) | மக்ஸி புறெக்ஸ் |
| றெறின் சாறிஸ் | லேடீஸ் பெல்ஸ் | T சேட்ஸ் |
| பிரிண்டெட் காஞ்சிபுரம் | ராங்கிளர் சேட் | மியூஸிக் சூட்ஸ் |
| (F)புல் வொயில் சாறிஸ் | பிளீட்டெட் ஸ்கேட்ஸ் | சோட்ஸ் |
| | சேட்ஸ் வகைகள் | சேட்ஸ் வகைகள் |

இன்னும் கண்கவர் வர்ண இம்போட்டட் ஜவுளி ரகங்கள் அனைத்திற்கும்

# ராஜ்கோபால்ஸ்

"ஹிங்" காமன்ஸ் தயாரிப்புக்களின் வடபகுதி ஏகவிநியோகஸ்தர்கள்

47, பெரியகடை, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7168 — 7525


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, செட்டித்தெரு 68-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under; No: QD/8948/18 The Eelanadu P B No; 49; Telegeram Eelanadu; T.Phon: 389